
நகர் ஊரமைப்புத்துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

பல்லடம் ஊராட்சி ஒன்றியம்

திருப்பூர் மாவட்டம்,பல்லடம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம்,வடுகபாளையம்புதூர் ஊராட்சி,வடுகபாளையம் கிராமம் , க.ச. எண். 142/1A1- ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.



அளவு - 1 : 400 (திட்டமில்லா பகுதி)

வ

இணையவழி விண்ணப்ப எண் : 9YPQV5OQ நாள் : 01.01.2025

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.10½ ஏக்கர் (அ) 4472.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 15

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

மனைப்பிரிவு சாலை பரப்பு : 1380.825 ச.மீ

II) பூங்கா

ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு: (4472.00 - 1380.825) x 10% = 309.12 ச.மீ

அரசாணை எண் :18 நநி (ம) கு.வ துறை நாள்: 04.02.2019-ன் படி பூங்கா ஒதுக்கீடு 309.12 ச.மீ பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

III) பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக 1.0 %)

A) LOCAL BODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (4472.00 - 1380.825) x (0.5/100) = 15.46 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 16.80 ச.மீ = 0.54 %

B) TANGEDCO / உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (4472.00 - 1380.825) x (0.5/100) = 15.46 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 24.20 ச.மீ = 0.78 %

கட்டிட வரம்பு : 9.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்.
9.0 மீ முதல் 18.0 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்.
மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ யும் விடப்படல் வேண்டும்.
12.0 மீ மேல் 30.50 மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5 மீ x 4.5 மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண் :18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண் :16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020 (ம) -ன் படி நடவடிக்கை கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் :181, வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சி துறை நாள்:09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு தார் சாலை, மழை நீர்வடிகால் வசதி , மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், வடுகபாளையம் ஊராட்சியின் தனி அலுவலர் உறுதி செய்துகொள்ளவேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வானையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 0.60 மீ x 1.2 மீ அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடம் தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

SWP / DTCP / TIRUPUR / LAYOUT No. 47 / 2025

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்

Signature valid Signature valid